# அமிர்தவசனி

-223-

தெய்வீக மாதப்பத்திரிகை

-221- — பக்கம் — 223.


| | | |
|---|---|---|
| மலர் 2 | விக்ருதி ௵ புரட்டாசி மீ | விலை |
| இதழ் 6 | செப்டம்பர்—அக்டோபர்—1950 ௵ | அணா 2½ |


Acc. No 18580



சூரபத்மனை வதைசெய்ய பிருஹஸ்பதி
சுப்பிரமணியக் கடவுளை வேண்டி வற்புறுத்துகிறார்.

(காந்தபுராணச் சித்திர விளக்கம்—16)

-222-

பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | விடும் திருடரும் | (திருப்புகழ்மணி) | ... 1 |
| 2. | கந்தர் கலி வெண்பா | (ரசபதி) | ... 3 |
| 3. | பக்தியும் இசையும் | (வேலூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை) | ... 12 |
| 4. | ஆருயிர் மீன் | (புலவர் அரசு) | ... 18 |
| 5. | தருவதும் பெறுவதும் | (நடேச கவுண்டர்) | ... 22 |
| 6. | ஒரு கவிப் புலவன் | (சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) | ... 27 |
| 7. | ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம் | (V. S. வேங்கடராமன்) | ... 31 |
| 8. | ஸ்ரீ முருகன் பரிவார வணக்கம் | (N. S. ராமச்சந்திர அய்யர்) | ... 32 |
| 9. | ஸ்ரீ அருணகிரி அனுபூதி | (ஸ்ரீ வத்ஸன்) | ... 35 |


'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். நான்கு வருடச் சந்தா ரூ. 5 8 0 ஆயுள் சந்தா ரூ. 25-0-0 அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா ரூ. 2 0-0 அனுப்பவும். (வி. பி. இல்லை)


சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு:

பி. டி. பாணி அன்டு கம்பெனி

17, வேங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி

Regd. Trademark "EVEREST" Telephone 2305

P. R. NATHAM & CO.,

High Class Stationers, Importers of Drawing Materials, Artists' Colours and Chinese Crackers

No. 2/285, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1

*Sole Distributors of* :—EVEREST BRAND STATIONERY & CARBON PAPERS

# அமிர்தவசனி

தெய்விக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி


"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"


| மலர் 2 | விக்ருதி ஞு புரட்டாசி மீ<br>செப்டம்பர்—அக்டோபர்—1950 | இதழ் 6 |
|---|---|---|


## வீடும் திருடரும்

(திருப்புகழ் மணி)

மாயை என்பது இரவு. மனையாவது நெஞ்சம். விஷய வாசனைகள் கள்வர்கள். மதி அல்லது அறிவு என்பது விளக்கு — (Torch light). ஆசைகள் கவிழ்ந்து அறிவை மூடிவிட்டன. ஆனந்தம் எனும் பொக்கிஷம் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்தது. பெட்டிகளை உடைத்துப் பொக்கிஷங்களைப் பறித்து இந்தக்கள்வர்கள் கவலை துன்பம் இவைகளை நிறைத்துவிட்டு கொள்ளை அடித்துவிட்டார்கள். தெய்வம் என்ற ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் உள்ளிருக்கின்றான். அவனுக்கும் முறையிடுகின்றான் மானிடன். கள்வர்களுக்கு எல்லாம் போலீஸ்கார னைக் கண்டால் பயம். அடங்கி இருப்பார்கள். அவன்

முடுகிய மயில்மிசை யூர்ந்து வேல்விடு முருகோனே.
பிருகதி பெற அருள் சேர்ந்து வாழ்வது மொருநாளே.

இல்லையேல் அக்கிரமச் செயல்களைத் தவிர வேறில்லை. ஆகையால் உள்ளேயே போலீஸ்காரனை வைத்துக்கொண்டிருக்கும் தொண்டர்களுக்குத் திருட்டுப் பயம் கிடையாது என்றார் போலும் தாயுமானார். சித்தர் இது நோக்கி ஒரு விண்ணப்பம் செய்கிறார். அகத்திலுறையும் ஈசனைப் பார்த்துச் சொல்வது மிகவும் அழகு.

ஆடுகாட்டி வேங்கையை அகப்படுத்துமாறுபோல்
மாடுகாட்டி என்னை நீ மயங்க வைக்கலாகுமோ
கோடுகாட்டி யானையை கொன்றுரித்த கொற்றவ
வீடுகாட்டி என்னை நீ வெளிப்படுத்த வேண்டுமே.

ஐம்பொறிகளால் ஆளப்பட்ட சரீரத்தில், உலக வாசனைகளால் இழுக்கப்பட்டு என் மனம் சிறைப் பட்டதே! ஆட்டை அடித்துத் தின்னும் ஆசையால் புலி வலையில் சிக்கிக்கொண்டது போல்தான் இருக்கின்றது.

உடம்பு எனும் வலையில் அகப்பட்டு ஆட்பட்டு துன்புறுவேனை, வெளிப்படுத்த வேண்டுமென்று மன்றாடுகின்றார். ஆணவம் எனும் மத யானையை, வதைத்து, கள்வர்களை அடக்கி, கட்டுண்ட என்னை அவர்களைவிட்டு வெளியேற்றி ஆளவேண்டும் என்கின்றார். கட்டுப்படுத்துவது சிறை—மனை. கட்டையொழித்து வெளியில் ஏறுவது வீடு. "வீடு காட்டி என்னை நீ வெளிப்படுத்த வேண்டுமே!" மனை வீட்டில் நாட்ட வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்—கட்டுப்படுவது வீடு அல்ல. கட்டப்படுவதல்லவோ

---

மறவர் வாணுதல் வேடைசோ ரும்போழ் புயவீரா
தீனமு மேமிக வாழ்வுறு மின்பைத் தருவாயே.

வீடு. ஐம்பொறிகளும் கட்டப்பட்டால் வீடு பிறக்கும். அந்தத் தனி வீட்டில் உறைவதே நன்று. 'பஞ்சபூத வீட்டில் இராமல் தனி வீட்டில் உறை' என்றார் அருணகிரியார். முருகன் பாதம் இரண்டுக்கும் மத்தியில் இருக்கும் பிரதேசம். இவ் வீடுகள் கட்டி வாழ நல்ல க்ஷேத்திரமாம் என்று திருப்புகழில் உபதேசித்தார்.

## கந்தர் கலிவெண்பா

### (ரசபதி)

#### முதல் நிலை

என்றும் உளது ஆணவம். சகஜ மலம் என்ற பெயர் பெறும் இது, அநாதி சையோகமாக ஆன்மாவில் அமைந்திருக்கின்றது. அதன் தொடர்பால் இருளையே கண்டு, மறதியே பெற்று, அறியாமையே எய்தி, துன்பமே தோய்ந்து, முகில் மண்டலத்தின் கீழ் முனகிக் கொண்டிருக்கும் உயிர், வெய்யிலில் வேகிறது; மழையில் நனைகிறது; பனியில் நடுங்குகிறது; இடியில் அதிர்கிறது. காற்று செலுத்தும் திசையில் சென்று, அணுவாகிக் கலங்குகிறது. கேடு தரும் இந்த அவஸ்தை **கேவலம்** என்ற பெயர் பெறும். இது உயிர்க்கு உடல் இல்லாத நிலை.

#### குடி மனை

அது கண்டு உய்தி நேர எண்ணுகின்றான், உமையாள் குமரன். அவ்வளவில், மாயை உலகாய் மலர்கிறது. உலகிலிருந்து உண்டாகின்றது உடல். காலத் தத்துவமும், சிற்

---

தூயா துதித்தவர்கள் நேயா வெமக்கமிர்த தோழா
வாரே னெனக்கு மெதிர் வரவேணும்.

சத்தியும் காட்டிய உடலைக் காண்கிறது. ஆதரவாகத் தோன்றிய ஆக்கையில், குடி புகுகின்றது ஆன்மா.

இந் நிலையில், பகலில் ஒளியை, இரவில் இருளைப் பார்க்கிறது. மறதியும் நினைவும் மாறி வருதலை உணர்கிறது. அறிவும் அறியாமையும் விரவுதலை யறிகிறது துன்பமும் இன்பமும் தொடர்கிறது. உடல் புகுந்த பின், உயிர்க்கு உடன்பாடும் எதிர் மறையுமாக வரும் இந்த அவஸ்தை சகல நிலை யெனப் பெறும்.

கேவலாவத்தையை விட இது எவ்வளவோ சிறந்த தெனினும், ஒளியும், நினைவும், அறிவும் இன்பமும் மாறி மாறி வருதலின், தடுமாறுகின்றது ஜீவன்.

## முடிந்த நிலை

இருள் கலவா ஒளி நிலையம்; மறதி புணரா நினைவுலகம்; அறியாமை செறியா அறிவுத் தலம்; துன்பு கலவா இன்ப இடம் ஒன்று உண்டு. கேவலம், சகலம், சாராத அது, சுத்தாவஸ்தை யென்ற பெயர் பெறும். அது பத முத்தித்தலம்; அதையும் கடந்தது பரமுத்தி நிலம் என்று ஓதுகின்றது வேதம்.

"நீடார் ஷட்ாதரத்தின் மீதே பராபரத்தை நீ காண் என" அப் பரமுத்தியைக் கனிவொடு காட்டுபவன் ஸ்ரீ கந்தப் பெருமான். அரிய இந்த உளவை, அநுபூதி பெற்ற மேலோர் அறிவிப்பர். விநய சிரவணத்தால் அதை அறிய வேண்டும். உணர்ந்து, அப்பேறு வாய்க்கும் வழியில் வாழ வேண்டும் ஆன்மா.

---

**சதகோடி இருடியர்கள் புகழ்ஞான பெருமாளே**
**அதிசயமெ னருள்பாட வரவேணும்.**

தடுமாற்றம்

அழிந்தால் தானே! அதற்கு மாறாக, மாயா விசித்திர உலகில் லயித்து மதியங்கும். வந்த வேலையை மறக்கும். பந்தக்காலப் பற்றும் வினைகள் பலவற்றை விளைக்கும். தான் விளைத்த வினைப்பயனைத் தானே அநுபவிக்கும். பெருமையும் சிறுமையும் தான்தர வருமே என்பதை நினைந்து மறக்கும். தலை விதி யென்று சொல்லித் தடுமாறும் என்னே இந்தப் பரிபவம்!

உண்மைக் கதை

செம்பில் களிம்பு சேர்ந்தது போல, ஆன்மாவை அநாதியே பற்றிய ஆணவ மனையாள், உயிர்க்குச் சிவ நிறைவு தோன்றுவண்ணம் உள்கவர் எழுப்பி, இருளை நிறைத்தாள். இரவும் பகலும், இன்பும் துன்பும், ஒளியும் வெளியும் உணரா வண்ணம் இறுக்கும் அரக்கியிவள், அலக்கழிக்கும் அஞ்ஞானம் என்னும் பேய்ச்சேய் ஒன்றைப் பெற்றாள்.

எண்ணும் எழுத்தும் உணரான். தன்னையும் காட்டான். தந்தைக்குத் தருவான் தடுமாற்றம். மருள் தரும் இம் மைந்தனால், உயிரின் துயரம் ஒரு கோடி.

மாயைச் சேர்வு

இவளாலேனும் இன்புற்றிரு என்று இறையருள் ஊக்க, இனிது வந்தாள் மாயை. அவளொடு கலந்தது ஆன்மா. பின்னவள் சாகசம் மிகவும் பெரியது. அளவிலா உருவால் அணைத்துக் கெடுப்பள். வகை வகையாக உடலம் வனைவள். வையகம் எல்லாம் வாயில் இடுவள்.

---

விரிதல மெரிய குலகிரி நெரிய விசைபெறு மயிலில் வருவோனே கடுகியு னடிகள் தருவாயே.

இரவில் பகலை, பகலில் இரவை எவர்க்கும் காட்டுவள். பொய் மெய்யாக, மெய் பொய்யாக்குவள். உறங்க விடாள். பழி நாணாள். தவத்தை மறுப்பள். மானம் போக்குவள். இரவும் பகலும் உயிரை இழுத்தணைக்கும் இந்தப் பிடாரி, **மனம், புத்தி, சித்தம், அகங்காரம்** எனப் பெற்ற நலமில மக்கள் நால்வர்.

## குதிக்கும் குரங்கு

மனம் என்பவன் ஒரு வானரம். இவன் காமக் குழியில் கடுகிப் பாய்வன். மதகளிறுகிப் படு குழி விழுவன். கோபக் கனலில் குதிப்பன். உலோபச் சிறையில் உழல்வன். மோகக் கடலில் மூழ்குவன். மதம் மிகுத்து மதங்களைப் பகைப்பன். முத்தம் தரல்போல் மூக்கைக் கடிப்பன். உயிர் எனும் தந்தையை ஒரு நாளும் மதித்திலன்.

## புற்றுப் பாம்பு

புத்தி யென்பவன், வாய்மை தூய்மை வாய்த்தவன். பாவம் என்றால் பதறுவன். எனினும், விவகாரங்களில் வீழ்ந்து தயங்குவன். தருக்கு மிக்கவன் வாளா இரான்.

## நாய்ச்சேய்

சித்தம் என்பவன், மதிமண்டலத்தைப் பற்றச் சிந்திப்பன்; எட்டவும் முயல்வன். தன் அந்தஸ்து அறியான். வான் கண்டவன் போல் வாய்ப் பறை அறைவான்.

## காளைக் கான்முளை

அகங்காரம் என்பவன், முன் பிறந்தவரை முடுகி விழுப்பான். தருக்கி ஆடுவான். என்னில் மேலோர்

---

**அருள் பாலிக்கும் சுடர் பாதக்குகனே முத்தின் கழல்வீரா**
**உன் செயலால் அற்புத ஞானத்தின் கழல்தாராய்.**

இல்லை யென்பான். வாயாலேயே அறம்பல செய்வான். வணங்கா முடியோன் இந்த வழக்கன். இந்த நான்கு மக்களாலும் நடுக்கடைகின்றது ஆன்மா.

### வினை மனைவி

இருமனைவியர்த் தொல்லையால் இடர் கண்ட ஆன்மா, அமைதியை நோக்கிச் சென்ற வழியில், கன்மம் என்பாளைக் கடிமணம் செய்தது. முதல் மனை தாரம், பின் மனை பாரம்; அதற்கு அடுத்தவளோ கோரமே செய்யும் கொடியவள் ஆனாள். எவரையும் நெருங்குவள். பல உரு அமைவள். கருப்பஞ்சாறு புகட்டுவள் ஒரு வடிவில்; கஞ்சி அருந்துவள் மறு உருவில். அமுதம் ஊட்டுவள் ஓர் உருவில்; பட்டினி கிடத்துவள் மறு வடிவில். ஓர் உருவில் மலரணை. ஓர் உருவில் பாய். ஏழைக் குறும்புகள் எண்ணில செய்வள்.

### முக்குண மக்கள்

இவள் தரு மக்கள் மூவர். இராஜசம், தாமசம், சாத்துவிகம் எனும் பெயரினர் அவர். ஏற்றி யிறக்குவர். எங்கும் நடப்பர். மேல் கீழ் செய்வர். உவகை யூட்டுவர். உதாசீனம் செய்வர். விழலுக்கிறைப்பர். பயனை யிழப்பர். கண் கலங்கி நிற்பர். சிவ புண்ணியம் எனில் தூரச் செல்வர். பெண்மயல் பெரிது கொள்வர். இன்னம் பல இவர்கள் செயல்.

மூன்று மனையரும் முழுப்பாய்ச் சுருட்டிகள்; பெற்ற பிள்ளைகள் சண்டர் மிண்டர்; இவர்களால் விதிர் விதிர்த்து வேதனை யுறுகிறது உயிர்.

---

**ஆதிகற்பக விநாயகர்க்குப் பிரகார பொற்சரவணை**
**முத்திபெற வீட வித்து மயிலாடு சுத்தவெளி சித்தியரவோ.**

## மோசப் பரும்மனே

ஆன்மா குடி புகுந்த வீடு இந்த உடல். இவ் வீடு, மலமும், நீரும் மாறாது ஒழுகும். சுற்றிலும் இருப்பது ஒன்பது பொத்தல். சீயும் கிருமியும சேர்ந்து கிடக்கும். என்பு தோல் இறைச்சி. எங்கும் செந்நீர். கிடந்து, இருந்து, நடந்து, இந்த உடல் செய்துயரம் ஒரு கோடி.

வாதன் பித்தன் சிலேத்துமன் என்பார் வீட்டிற்கு உரியோர். மாறி மாறி என்றும் போரை எழுப்புவர் இவர்கள். பிண்டக்கூலி அன்றன்று பெறுவர். எரியை மூட்டுவர். எண்ணெய் இடுவர். பிணி வளர்க்கும் பெருங் கொடியர், இவர் செய் துயரம் ஒரு கோடி.

## துன்ப ஜீவன்

அல்லோல கல்லோலமான இவைகளின் நடுவில், ஆன்மாவிற்கு வேதாந்த சித்தாந்தத்தில் விருப்பு. இதிகாச புராணங்களில் நயப்பு. காம சாஸ்திரங்களில் கண். வீண் கதைகளில் விழைவு குடிக் கூலி கடன் கொடுத்தல்; நித்திரைப் பரத்தையை நினைநது கூடல்; இப்படியே பொழுதும் சரியாய்ப் போகின்றதுவே என்று அலறும் ஒரு உயிர் வரலாற்றை, பதைக்கும் உளத்தொடு பாட்டுருவத்தில் பாடுகின்முர் நம் வடலூர்ப் பெருந்தகை.

## குரு முகம்

இங் நிலையில் ஆகாமியம ஏறும்; சஞ்சிதமாகும்; பிராரத்துவப் பெயரால் அவைகளை யநுபவிக்க எண்ணிலாத பல பிறவி யெடுக்கும்; இங்ஙனம் உய்ய வழியின்றிக் கண் கலங்குகின்றது உயிர்

---

**பொறபாத சிவாய நமோஅர சம்புபவோ**
**உன்னிடத்துத் தான்பெற ஞான சதாசிவ அன்புதாராய்.**

எனினும் இடையிடை செய்த பசு புண்ணியத்தால், அறிவு சிறிது அரும்பும்; உணர்வொடு புரியும் நூலாய்வும், மதிக்கும் கேள்வியும் மலரும்; சிவ சிந்தனை காய்க்கும்; இறைவழிபாடு கனியும். இங்ஙனம் சிறந்தெழுந்த சிவ புண்ணியம், உய்ய வழி உணர்த்தும் குரு தரிசன வேட்கையை யெழுப்பும். அந்த நிலையில், சகல நிலைக்கு உரிய ஆன்மாவின் மாசு அழியும். அது கண்டு, குருபரனாகி வருகின்றான் குமரன். சகலர்க் கருள்வது குரு முகந்தானே !

## இருமலர்ப் பேறு

மாயா விகார உலகம, அவ்வளவில் மறைந்து விடுகின்றது: மும்மலத்துள் ஒரு மலம் மறைய, கருமலம், கன்மம் எனும் இருமலத்துள் கட்டுண்டோர் **பிரளயா கலர்** எனும் பெயர் பெறுவர். இவர்கட்கு அருள் செய்ய எழுந்தருளுகின்ற இறைவன் திருவுருவம், நினைத்தாலே நெஞ்சம் நெகிழ்கின்றதே ! அதோ பாருங்கள் !

## அருள் வடிவன்

இடப்பாலில் வெண்கதிர் பரப்பும் திங்கள் ஒரு திரு விழி; வலப்பால் செங் கதிர் விரிக்கும் ஞாயிறு ஒரு நல் விழி; ஞானக்கனல் விளைக்கும் நெற்றிக்கண் ஒன்று. ஆக, முன் முகத்தில் முக் கண்ணன்; பின் முகத்தில் தாழ் சடையன்.

தனக்கு மேலொரு தலைவன் இலாமையின், எவரையும் வணங்க வழியிலாதவன் அந்தப் பரன். வணங்கினால்

---

**சிவகாம நாயகி தருபாலா**
**உனதடியாராகிய மோன ஞானிகளுடனே சேரவு மருள்வாயே.**

சடை முன் தாழும்; அஃதின்மையின், பின் தாழ் சடை யென்றும் பின் தாழ் சடைதான்.

உலகை நீறாக்கும் கனல், அவன் ஒரு கரத்தில் அடக்கம். வான் நோக்கிப் பாயும் முனைப்பு மிக்க மானை, தன் சுட்டு விரலில் கட்டுப் படுத்தியுளன். மின்னலெனத் துவள் இடை எம் இறைவி, அவனது இடப் பாகத்தில் ஒன்றி யிருக்கின்றாள்.

பவமகற்றும் சிவ தருமம், வெள்ளிமலைபோல், உயர்ந்த விடை உருவம் கொண்டுளது. பவள மலைபோல், அதன் மேல் விளங்குகின்றான் பரமன். புனித அத் தெய்வத் திருவுருவை, ஆர்வத்தொடு சேவிக்கிறது ஆன்மா. **விடை யேறும் விமலன்தான் பிரளயாகலர்க்கு அருளை விளைப்பவன்.**

### ஒருமல நிலையர்

கனிவு தரும் அக் காட்சி, காழ்த்த கன்மக் கட்டறுக்கின்றது. மாயை, கன்மம் எனும் இருமலம் மாய்ந்ததும், எஞ்சியிருந்த கருமலம் என்னும் ஒருமல வலியால், களைப்பெய்தி விடுகிறது உயிர்: ஆணவம் மட்டும் உடைய உயிர்கள், **விஞ்ஞானகலர்** எனப் பெறுவர். சுகுண முற்ற இவர்கள், சுத்தாவஸ்தை பெற்றவர்கள்.

### இன்பம்

அருட் கண்ணால் இப்பேறு பெற்ற ஆன்மாவின் எதிரில், கண்ணுதல் திருவுருவம் நேரேயெனக் காந்திடுகின்றது. விம்மிதம் இதனால் விளைகிறது. மாயையிலிருந்து விடுவித்த, கன்மக் கட்டறுத்த கருணையை உணர்ந்து, உயிரின் உள்ளம் உருகும். அவ்வளவில், ஆண

---

**புனமேவிய வள்ளி வேளைக் கார மனோகர**
**முகமாறும் உன் உள்ள ஞானப் போதமு நீதர வருவாயே.**

வச் சேட்டை யடங்கும். புறம் தோன்றாப் புனித தெய்வத்தைப் புளகித்து உணர்ந்து, 'அற்புதம்' 'அதிசயம்' என்று பலபடப் பாராட்டும் ஆன்ம உணர்வில் அருளமுதம் பாய்ச்சுகின்றான் அம்மையப்பன்.

அவஸ்தைகள் மூன்றும் அகல்கின்றன. மும்மலத்திலிருந்து முன்னரே விடுதலை பெற்ற ஜீவன் முத்தர்களோடு, உயிரை உறவாட விடுகின்றான் ஓம் வடிவன்; பழைய உறவு, பொய்த் தோற்றம்; இவ்வுறவு, மெய்க் கூட்டம். இவ்வுறவில் தூய்மை பிறக்க நிறைவுடைய பர முத்தியில் நிலைக்கச் செய்கின்றான் அந்த நின்மலன். என்னே இந்த இன்பம்!

கன்ம மலத் தார்க்கு மலர்க் கண் மூன்றும் தாழ் சடையும்
வன் மழுவும் மானுமுடன் மால்விடை மேல்—மின் இடத்துப்
பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளி வெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த
கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்து உள் நின்று
ஒரு மலர்த்தார்க்கு இன்பம் உதவிப் பெருகி எழும்
மூன்றவத்தையும் கழற்றி முத்தருடனே இருத்தி
ஆன்ற பரமுத்தி யடைவித்து

[கன்ம மலத்தார்க்கு—கன்ம மலத்தொடு ஆணவ மலமும் உடையவர்கட்கு எனவே, மாயா மலம் நீங்கிய இரு மலம் உடைய பிரளயாகலர்க்கு என்றபடி. மால்-பெரிய. மின்-உமா தேவியார்; ஆகு பெயர். இடத்து-இடப் பாகத்து. பொருப்பு-மலை போன்ற சிவபிரான். வெற்பு-மலை போன்ற விடை. கருமமலம்-(இங்கு) வினை. கண்-ஞானம். உள்-(உயிரின்) உணர்வுள். ஒரு மலத்தார்-

---

மாயச் சூரரை வெட்டி மாளப் போர் தொலைத்த வடிவேலா
தாபமிக்க தீமைக்கு ஆவிதப்ப நேதிதாராய்.

ஆணவ மலம் மட்டும் உடைய விஞ்ஞானகலர். **இன்பம்**-பேரின்பம். **மூன்றவத்தை**-கேவலம், சகலம், சுத்தம் எனும் மூன்று நிலைகள். **முத்தர்**-பத முத்தி பெற்றவர்கள். **ஆன்ற**-உயர்ந்த.]

ஸ்ரீ வைகுண்ட கயிலாயத்தில் பிறந்து, திருச்செந்தூர் இறைவன் திருமுன் பரவசத்தொடு நின்று, உளம் நெகிழ்ந்து இவைகளை ஓதும் குமர குருபர அடிகளார் பரமனது பாதாதி கேசம் பாடும் அணியலங்கார நுட்பங்களை அடுத்த இதழிற் காண்பம்.

## பக்தியும் இசையும்

ஸ்ரீ த்யாகப்ரும்ம, தெய்வீக, சங்கீத இசைப் பொருள் விளக்கம்

**(கீழ்வேளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை)**

15-வது கர்த்தா

மாயா மாளவ கௌளையில் ஜன்யம்

ராகம்: ஜகன்மோகினி

**தாளம்: ரூபகம் சதுஸ்ரஜாதி**
சம இடத்தில் ஆரம்பம்

ஔடவ, ஷாடவ, ராகம்: அந்தர காந்தார, காகலி நிஷாதம், ராகச்சாயாஸ்வரங்கள் ஆகும்.

ஆரோஹணம்: ஸ க ம ப நி ஸ்
அவரோஹணம்: ஸ் நிபமகாரிஸ
இந்த ராகம் இரவு, பகல் ஆகிய இருபொழுதிலும் பாடத்தக்கது.

ஷட்ஜம், அந்தரகாந்தாரம், ஸுத்தமத்யமம், பஞ்சமம், காகலிநிஷாதம், ஷட்ஜம். காகலிநிஷாதம், பஞ்சமம், ஸுத்தமத்யமம், அந்தரகாந்தாரம், ஸுத்தரிஷபம் ஷட்ஜம்.

---

**வாசவன் தொழு தின்புறவே மனுநூல் விளம்பிய கந்தவேளே**
**உன்திருக்கண்கள் ஈராறும் ஈராறு திண்புயமும் கொள்வேனே.**

### பல்லவி

ஸோபில்லு ஸப்தஸ்வர
ஸுந்தருல பஜிம்பவே மனஸா ஸோ

### அனுபல்லவி

நாபி ஹ்ருத் கண்ட ரஸன
நாஸாது லயந்து ஸோ

### சரணம்

தர ருக் ஸாமாதுலலோ
வர காயத்ரீ ஹ்ருதயமுன
ஸுர பூஸுர மானஸமுன
ஸுப த்யாக ராஜுனி யெட ஸோ

### கருத்துரை விளக்கம்

நாபி, ஹ்ருத், கண்ட, ரஸன, நாஸாதுல, யந்து (உந்தி, உள்ளம், குரல், நாக்கு, மூக்கு, ஆகிய இடங்களில் முறையே படிப்படியாக தொட்டு இவைகளின் சேர்க்கை யால் (ஸோபில்லு ஸப்தஸ்வர) ப்ரகாசிக்கின்ற ஏழு, ஸ்வர ஒலிகளான, (ஸுந்தருல பஜிம்பவே மனஸா) மஹா அழகு பொருந்திய ஸ்வரதேவதைகளைக் கொண்டு இறை வனைத் துதிசெய் மனமே.

தர ருக் ஸாமா துலலோ) இந்த உலகத்தில் ருக் வேதம், சாமவேதம் முதலாயுள்ள எல்லா வேதங்களிலே யும் (வரகாயத்ரி ஹ்ருதயமுன) சிறந்த காயத்ரி மந்திரத்தின்

---

**மறையவர்றலை யுடையும்படி நடனங்கொளு மரமைக் கதிர்வேலா சுகசந்திர முகமும்பத அழகுந்தமி யேனுக் கருள்வாயே.**

மனத்தத்துவத்தினுள்ளும் (ஸுர பூஸுர மானஸமுன) தேவர்கள், இந்த பூமியில் உள்ள அந்தணர்கள், ஆகிய இரு பகுதியினர்களுடைய உள்ளத்திலும் (ஸுபத்தியாக ராஜுனி யெட) எப்பொழுதும் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியை மனத்தினுள்ளேயே ஆரோஹணித்து அவனையே பக்தி செய்து வருவதால் கிடைக்கப் பெற்ற மங்கலத்தை உடைய அந்த த்யாகராஜனிடத்திலும் இருந்து (ஸோபில்லு ஸப்தஸ்வர ஸுந்தருல பஜிம்பவேமனஸா) ப்ரகாசிக்கின்ற, ஏழுஸ்வர வடிவமான ஒலி அழகான தேவதைகளைக் கொண்டு இறைவனைத் துதி மனமே—என்கிறார் த்யாகப்ரும்மம்.

## கருத்துள்ளுரை

இறைவனை அடைவதற்கு எத்தனையோ மார்க்கங்கள் உள்ளன. ஆயினும் இறைவனை இசையோடு துதித்து வழிபடும் பக்தி மார்க்கத்திற்கு ஈடு இல்லையென்பது அநேக பெரியார்களின் தேர்ந்த, அனுப, முடிவு. இதனைத் த்யாகப்ரும்மம் மிகவும் அழகாக நமக்கு எடுத்தோதி உபதேசிக்கிறார்.

அதாவது இந்த உடலானது வாழ்வதற்கு, மூலப் பொருளாய் உள்ள தத்துவம் மூச்சு. இந்த மூச்சானது முதன் முதலாகத்தோன்றும் இடம், உடம்பினுள், உந்தியென்னும் இடத்திலிருந்துதான். ஆதலால் ஈசனைப் பஜிப்பதற்கு மூச்சின் தேவை அவசியமாகிறது. ஆனால் மூச்சு மட்டும் இருந்து விட்டால் போதாது. இன்னும் சில உபகருவிகளும் தேவை. அதுதான் முறையே, மனம், குரல்,

---

தினமுங் கருத்து ணர்ந்து சுரர்வந் துறப்பணிந்த பெருமானே
மிக விஞ்சு பொற்பதங்கள் தருவாயே.

(அதாவது ஒலிக்கருவி உள்ள இடமான குரல்வளை). இவை இரண்டும் இருந்தால் மட்டும் போதாது. ஈசனைப் பஜிப்பதற்கு நாக்கின் உதவியும் தேவை. (இங்கொரு மர்மம்: ஆதாவது ஒலியின் நுணுக்க தந்திரங்களாலேயே ராகமாகப் பாடவேண்டுமானால் நாக்கின் உதவியும் தேவை. மற்றும் அவன் நாமத்தை, எந்த மொழியிலாயினும் உச்சரித்துத் தோத்திரம் செய்வதற்கும் நாக்கின் உதவி தேவை. இவை மட்டும் இருந்தாலும் போதாது, ஒலி நயம் இன்பமாக இருக்கவேண்டுமாயின், ப்ரணவ வடிவமான, ஒலி வெளிவரும் துளைவழியாகிய மூக்கு தேவை. அப்பொழுதுதான் ஒலி இனிமையாக இருக்க முடியும். ஆண்டவன் இன்னிசையேதான் விரும்புவன் ஆதலால் மூக்கின் வழியாகவும், இருந்து அழகாகப் புறப்பட்டு, இன்பமாக ஜ்வலித்து ப்ரகாசிக்கின்ற ஏழுஸ்வரங்களாகியதும், அதனின் உட்பகுதி நுண்ணொலிகளாகியதும் ஆகிய தெய்வீக அழகானதும் ஆன இசை மார்க்கத்தின் வாயிலாக இறைவனைத் தோத்தரிக்க வேண்டும் மனமே என்கிறார் த்யாகப்ரும்மம்.

மற்றும், இந்த உலகத்தில், ஸாமம், முதலாயுள்ள வேதங்களிலும் இந்த ஒலியேதான் உயிர்த்தத்துவமாய் உள்ளது. இன்னும், சிறந்ததான, காயத்ரி மந்திரத்தின் உயிர்த்தத்துவமும் இந்த ஒலியேதான். ஹ்ருதயஸ்தானமாய் உள்ளதும், இவ்வொலியேதான். தேவர்கள், பூலோக அந்தணர்கள் ஆகியவர்களிடத்திலும் இருந்து, ஒலித் தத்துவமேதான் அவர்களின் மனத்துள் ஒளி விளக்காய்த்

---

**சிவகாம சவுந்தரியாள் பயந்தருள் கந்தவேளே**
**துயராழி விடும்படி சீர்பதம்பெற விஞ்சை தாராய்,**

திகழுகின்றது. இன்னும் இந்தத் த்யாகராஜனிடத்திலும் இருந்து இந்த த்யாகராஜனை மங்கலமாகச் செய்ததுமாகிய ஏழு ஸ்வரமும், அதனின் உட்பகுதியாகிய நுண்ணிய ஒலிகளாகிய தொண்ணூற்றாறு நுண்ணொலிகளும், ஆகிய தெய்வீக அழகு பொருந்திய இன்னிசையின் மூலமாக இறைவனைத் தோத்தரித்துப் பக்திசெய்வாய் மனமே, என்று த்யாகப்ரும்மம் இறைவனை அடைந்து இனிப் பிறவியுறுவண்ணம் இருப்பதற்கு இதுவே முடிவான சுலப மார்க்கம் என்று உபதேசித்து, மற்ற மார்க்கங்கள் அவ்வளவு சிரேஷ்டமானதல்லவென்று சொல்லாமற் சொல்லி உணர்த்துகின்றார். கவனிக்கவும்,

இதனாலேயேதான் அனேக பக்தர்கள் இந்த பக்தி மார்க்கத்தின் வாயிலாகவே இறைவனை அடைந்ததாக நமது சாத்திரங்கள் பகருகின்றன. ஆகவே பக்திக்கு இசை எவ்வளவு வேண்டற்பாலது என்பதும், நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்பது இங்கு மீண்டும் கவனிக்கற் பாலது.

குறிப்பு :

இங்கொரு ரகஸ்யம்: அதாவது. ஈசன் இசை வடிவினனாகவே உள்ளான் என்பதும் நாம் விளக்கிக் கொள்ள வேண்டிய விஷயம். எப்படியெனின், ஸப்தஸ்வர ஸுந்தருல என்றால் ஏழு ஸ்வர ஒலிவடிவாயும், அதனின் உட்பகுதி நுண்ணொலித் தோற்றத்தனாயும் இறைவனே உள்ளான் என்பதும், இதனால் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய நுண்மையாகும். இன்னும் இவைகளைப்பற்றி

---

தெள்ளுதமிழிசை யுதவு சங்கப் புலவோனே
பரவுதலி சனையை யென்றேற் கருள்வாயே.

ஆராய்ச்சி இருந்தால் அதிகம் விரிந்து விடும் என்பதை உத்தேசித்தே இத்துடன் நிறுத்திக் கொள்ளப்பட்டது.

ஜகன்மோகினி, ராக, அர்த்த, தத்துவ, பாவ, விளக்கம்: இந்த ராகமானது, ஒரு தாயானவள், தன்னுடைய அருமைக் குழந்தையின் நன்மையில் அக்கரையான கருத்துடையவளாய், தன் குழந்தை எப்படியெல்லாமோ தகாத வழியெல்லாம் சென்று கெட்டுப்போகிறனே என்று வருந்தி, "அப்பா குழந்தாய், இப்படியெல்லாம கெட்டுப் போகாதேடா" என்று மிகவும் பரிவோடு அவனுக்கு அன்பாகவும் அருமையாகவும்' எடுத்துரைத்து, இத்துடன் தன்னுடைய வருத்த அளவும் தொனிக்கக் கேட்டுக் கொள்ளும் பாவ தத்துவப் பண்பு ஆகும்.

தாள, கால, கதி, இட, இலக்கண, தத்துவ, அர்த்த பாவ, விளக்கம் : இந்த அன்புரை, வருத்த விஷயத்தை, ஆறு அக்ஷரங்கள் கொண்ட சம அளவுள்ள எண்ணிக்கையில் ; சத்வகுண இயற்கையாகிய, சதுஸ்ரஜாதி உள்கணக்கில் ; காலமும் நடுநிலைமையான, மத்தியமகால வோட்டத்தில்: நடையும் சதுஸ்ர நடையாகிய சாந்த இன்ப நடையில்; இடமும் பேத தத்துவமில்லாத சம இடத்தில்; ஆரம்பித்து, தான் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு ஒத்த இலக்கணத்தில்; தாள, கால, கதி, இட, தத்துவம் பொருந்த, இயல், இசை, பாவ, இலக்கணங்கள் ஒன்ற உபதேசித்துள்ளார் த்யாகப்ரும்மம். இதனை நுணுகிப் பார்ப்போருக்கும் நல்ல திறம் வாய்ந்த இசை, இயல், பாவ, லய, புலமை வாய்ந்த புலவோர்கட்கும், நன்கு புலனுகும்.

---

**திருத்தாள் முத்தர்க் கருள்வோனே திருக்காளத்திப் பெருமாளே**
**மற்றேப் பிலதான மலர்த்தாள் வைத்தேத் தனையாள்வாய்.**

# ( ஆருயிர் மீன் )

(புலவர் ‘ அரசு ’)

ஓரிடத்தில் உப்புத் தண்ணீர் கொஞ்சமாகவே கொண்ட சிறு கிணறு ஒன்று உள்ளது. அதற்கு ஊற்றென்பதே சிறிதும் இல்லை. அக்கிணற்றில்-அந்த உப்பு நீரில்-ஒரு சிறு மீன் வாழ்கிறது. நன்றாக நீந்தி விளையாடவோ, துள்ளிக் குதிக்கவோ சிறிதும் இயலாத நிலையில் அக்கிணறு உள்ளது ஏதாவது பகையைக் கண்டாற் பதுங்கவும், அது பற்ற வந்தால் விலகியோடவுங் கூட ஒவ்வாது அம் மீனுக்கு!

இத்தகைய இடுக்கான இடத்திலே மீன் இருப்பதை ஒரு வலையன் கண்டு விட்டான். எல்லோரும் எளிதில் உணரக் கூடிய அந்த இடத்திலுள்ள மீனை அக் கொடியனான வலையன் மட்டும் உணராமல் இருக்க முடியுமோ? அவ்வலைஞனுடைய தொழில் இத்தகைய மீன்களைப் பிடிப்பது தானே? எங்கு மீன் இருக்கிறதோ என்று தேடித் திரியும் இவன் இம் மீனைக் கண்டதும் பிடிக்கத் திட்டமிட்டான். அவனிடம் ஒரு முத்தலைத் தூண்டில் இருந்தது. அதனை அக்கேணியிலே வீசி விட்டான். அந்த மீன் அதனைக் கண்டு விட்டது! கலங்கித் துடிக்கிறது! கடவுளிடம் முறையிடுகிறது! கொடியவனாகிய அந்த வலையன் முயற்சி இது வரையில் தவறியதில்லை. ஒரே வீச்சில் நினைத்த மீனைப் பிடித்துவிடும் பயிற்சியுடையவன்! அஞ்சாத நெஞ்சினன்! இரக்கங் குடிபுகாத இறுகிய உள்ளத்தினன்! அந்தோ! அவன் அம் மீனைப் பற்றித் தின்னப்

---

கூடஅரனோடு நடமாடிய காளியருள்கூரு சிவகாமியுமை யருள்பாலா யோடனே நின் ஞான சிவமான பதமருள்வாயே.

பேராவலுடன் வாய் நீரூறப் பல்லைக் கடித்துக் கொண்டு கண் கொட்டாமற் பார்த்துக் கொண்டிருக்கிறான்! அவனுடைய தள்ளா முயற்சி தவறி யொழிந்து வெட்கமுற்றுச் செல்லுமாறு ஒரு வழி செய்யவேண்டும் என்று வேண்டுகிறது இறைவனை! இந்தச் சிறு கிணற்றிலிருந்து நீங்கித் தூயநீர்ப் பெருங்கடலொன்றில் விழுந்து, பேரலைகளினிடையே உலாவிப் பெருமிதம் எய்தவேண்டும் என்று மனக்கோட்டை கட்டியவாறு வேண்டுகிறது.

அம்மீன் எது? நம் ஆருயிரே. கிணறு எது? கருக்குழியே! நம்யாக்கையே! வலையன் ஒரு கணமும் தரியாமல் தன் தள்ளாமுயற்சியை முடித்துக் கொண்டு வரும் காலனே. அவன் எறிந்த தூண்டில்-முத்தலைத் தூண்டில்-ஐவளிபித்து என்னும் மூன்று நாடிகளே! அவன் நோக்கும் மிதப்பு எது! வாழ் நாளே அம்மீன் உலவ விரும்பும் பெருங் கடல் இறைவனுடைய அருட்கடலே!

எத்துணை நல்ல உருவகம்! உயிரை உடலினின்றும் கூறுபடுத்துவோன் கூற்றுவன், காலத்தைக் கணக்கிட்டுக் கையைப் பற்றுவோன் காலன். இவ்விரண்டு பெயர்களும் அறக் கடவுளுக்குக் காரணப் பெயர்கள். அறத்தின் வழியே சமநெறியிலே நிற்கும் சமனை-இயமமாக நடக்கும் இயமனை-நல்லோனை உருவகஞ் செய்யாமற் கொடியோனை உருவகஞ் செய்கின்றது உலகம். மேலும் அறத்தின் வடிவமாக நிற்கும் அக்கடவுளுக்குத் தமன் நமன் என்ற உறவுப் பெயர்களும் உள்ளன. பிறந்தவுடனே இறப்பும்

---

**முதிய மாதமி ழிசைய தாகவே மொழிசெய் நேத்தனைந் திடுமாறு**
**முறைமை யாகஅ டிகள் மேவவே முனிவு தீரவந்தருள்வாயே.**

உண்டு என்னும் உண்மையால் அறக் கடவுள் நம்மவனுக ஆய்விடுகிறுன். எனினும் அவன் தோற்றமோ, கருநிறம்-அனல்விழி-சூல மேந்தியகை-பாசக் கயிறு பற்றியகை-கடுத்தமொழி-அஞ்சத்தகும். தோற்றம்-இங்ஙனம் கொடியனை கொலையாளியின் காட்சியிலே காணப்படுகிறுன் நூல்களில்! 'எங்ஙனமோ கூற்றுவன்' மக்களுள்ளத்திலே கொடியனுகவே குடியேறி விட்டான்! காரணம் என்ன? மக்களின் இனிய ஆசை மிக்க உயிரைக் கவர்வோன் அவன் என்னும் ஒரே நோக்கந்தான்.

ஆகவே, உயிரை மீனுக உருவகஞ் செய்த ஆசிரியர் அவனைக் 'கூற்றெனப் பெயரிய கொடுந்தொழில் நளையன்' என்றே கூறுகிறுர்! இறப்பை நினைந்து அஞ்சும் உள்ளம் அந்தக் காலனைக் கொடியனுக உருவகப் படுத்துகிறது.

'ஐவளி பித்து' என்னும் மூன்றையும் உணர்த்தும் நாடிகள் அழுந்திவிட்டால்-துடிப்பு நின்றுவிட்டால்-ஆயுள் முடிந்தது அன்றே! அம் மூன்று நாடிகளையும் முத்தலைத் தூண்டிலாக உருவகஞ் செய்தது எத்துணை விழுமியது!

வாழ் நாள் முடிவதும் தூண்டிலில் இருக்கும் மிதப்பு நீரில் அழுந்துவதும் எவ்வாறு இனிமையாய்ப் பொருந்துகின்றன பாருங்கள்!

மெய்யை உருவகப்படுத்தியதே ஒருவித அழகு! உவர்நீர்க் கேணி என்பது சிந்தனைக்கு விருந்தளிக்கின்றதை என்னென்பது!

ஊற்றில்லாத உவர் நீர்க் கேணியிற் சிறு குழியில் இருக்கும் மீன், அங்கே தன்னைப் பற்ற வந்திருக்கும்

---

மரகத நாராயணன் மருக, சதாகாலமும் இனையோனே
அடியவரோடு ஆள்வதும் ஒருநாளே.

கூற்றுவ நுளையனுடைய முத்தலைத் தூண்டிலுக்கும், அவ னுடைய தள்ளா முயற்சிக்கும் தப்பிப் பேரின்பப் பெருங் கடலிலே துள்ளி வீழ்ந்து இன்ப அலைகளிலே தவழ எவ் வளவு ஆவல் கொண்டிருக்கிறது என்பதை உன்னுந் தோறும் நம் உள்ளம் வியப்புக் கடலிலே தவழ்கிறதன்றோ?

இவ்வாறு நம் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஆசிரியர் குமர குருபர அடிகளாவார். அடிகளின் கற்பனை புலவர் மனத்திற்குத் தெவிட்டாத தேனாகும். திருவாரூர் நான் மணிமாலையின் பன்னிரண்டாஞ் செய்யுளில் இவ்வாறு கற்பனை செய்திருக்கிறார்.

அப்பகுதி:—

.......................................................

"தீநிறக் கடவுள்நின் கான்முறை வணங்குதும்.
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழில் நுளையன்
ஊற்றமில் யாக்கை உவர்நீர்க் கேணிப்
புலத்தலை உயிர்மீன் அலைத்தனன் பிடிப்ப
ஐவளி பித்தென அமைத்துவைத் திருந்த
முத்தலைத் தூண்டில் தூண்டி அத்தலை
வாழ்நாள் மிதப்பு நோக்கித் தாழா(து)
அயிறலைத் தொடங்கி எயிறலைத் திருத்தலின்
தள்ளா முயற்சி தவறுபட் டொழிந்தென
வெள்குறீஇ மற்றவன் விம்மித னாக
அருட் பெருங் கடலின்அவ் வாருயிர் மீனம்
கருக்குழி கழியப் பாய்ந்து தெரிப் பரும்
பரமானந்தத் திரை யொடும் உலாவி
எய்தரும் பெருமிதம் எய்த
ஐய! நின் கடைக்கண் அருளுதி எனவே!"

— சிவமார் திருப்புகழை எனுறு வினிர்புகழ
சிவஞான சித்திதனை அருள்வாயே.

திருச்சிற்றம்பலம்

## தருவதும் பெறுவதும்

(வித்துவான் கு. நடேச கவுண்டர்)

குறைந்த விலைக்குச் சிறந்த பொருளைப் பெறுவதே நல்ல வாணிபம். அலாவுதீன் கதையில் பழைய விளக்குகளைக் கொடுத்துப் புதிய விளக்குகளை வாங்கினர்கள் அல்லவா? அவ்வாணிபத்தில் பழைய மந்திர விளக்கைக் கொடுத்துப் புதிய விளக்கை வாங்கி ஒருத்தி ஏமாந்தாள். புதியதைக் கொடுத்துப் பழையதைப் பெற்று இலாபம் அடைந்தான் மந்திரவாதி. இவர்கள் வாணிபம் அவாவின் அடியாகத் தோன்றியது. பேதைப்பெண் பழைய விளக்கின் அருமை அறியாமல் ஏமாந்தாள். இப்போது நான் சொல்லுவது அத்தகைய வாணிபம் அன்று.

நம் இறைவன் ஒரு வாணிகன். அவனுடைய வாடிக்கைக்காரர்களுக்கு என்றைக்கும் இலாபமே தவிர நட்டம் இல்லை. மட்டச் சரக்கைப் பெற்றுக் கொண்டு உயர்ந்த சரக்கையே அவன் கொடுக்கின்றான். அதனால் அவனுக்கு நட்டம் ஏற்படாதோ எனின், நட்டமே அவன் (நடனமே) அவனது தொழில். அப்படித் தொழில் நடத்தினால் முதல் இழந்து போகமாட்டானோ எனில் அவன் முதலில்லா வியாபாரி. (தனக்கு முன்னோர் ஒருவரும் இல்லாத தனிமுதல் தானே ஆகி எல்லாம் நடத்துபவன்). அவனுடைய செல்வம் போவதுமில்லை, வருவதுமில்லை. அதனால் அவன் "சென்றடையாத திருவுடையான்" (சம்பந்தர் தேவாரம்) என்று புகழ் பெற்றவன்.

---

அமரர் புரந்தனக்கு மழகிய செந்திலுக்கு மருவை வளம்பதிக்கு சித்ர மயிலினில் வந்து முத்தி தரவேணும். [மிறையோனே

தாழ்ந்ததைப் பெற்று உயர்ந்ததைக் கொடுக்கிறான் அவன் என்று கருதி அவனுக்குப் 'பித்தன் என்று பெயரும் இட்டனர் சிலர். எனினும் அவன் "மதியுடையனே (அறிவுடையவன்; பிறையணிந்தவன்.)

ஓர்ந்து உணர்ந்தால் அவ்வாணிகன் பெரிய தந்திரசாலி (தந்திரம் = ஆகமங்கள்; சூழ்ச்சி) என அறியலாம். நாம் அறிந்து கொடுக்கும் பொருள்களோடு நம்மையறியாமலே மற்றோர் அரும் பொருளையும் சிறிது சிறிதாக அவன் கவர்ந்துகொள்கிறான். அவன் கொடுக்கும் சரக்கும் முன் சொன்ன அரும் பொருளின் அளவுக்கு ஏற்பவே இருக்கும். அவ்வரும் பொருள்தான் என்ன? அதுதான் நம் உள்ளம். வேண்டுவார் வேண்டியதையெல்லாம் அவர்கள் விருப்பப்படியே கொடுத்துச் சிறிது சிறிதாக அவர்கள் உள்ளத்தையே முடிவில் கொள்ளை கொள்ளுகிறான். அதனாற்றான்போலும் "அவனை உள்ளங்கவர் கள்வன்" என்று ஒரு சிறுவன் பேசினான்.

அவனுடைய வாணிப முறையைப் பாருங்கள் "குடங்கை நீரும் பச்சிலையும் உள்ளம் கலந்து கொடுத்தால் அதற்கேற்பப் பெருங்கடற்பள்ளியும், கற்பகச் சோலையும் தாமரை மலர் அணையும் தருவான்" உள்ளங்கலவாது கொடுக்கும் எத்தனை உயர்ந்த சரக்கையும் அவன் வாங்குவதில்லையாம். "பொக்கமிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு" நிற்பனும் இவன் என்றார். உளவறிந்த பெரியார் ஒருவர், "ஐயா வியாபாரியே! தங்கமலை உன் கையிலே உளது. குபேரனும் உன் அருகே காத்துக் கிடக்கிறான். காமதேனு, கற்

---

நீளது தானே நாடோறு மனத்தி லாசை விடாமல்
நீயு மாற நீமேவி யருள்வாயே.

பகம், சிந்தாமணி என்பவை நின்முன்னில் நின்றன. சந்திரன் உன்முடிமேலுள்ளான். நன்மைகளெல்லாம் உன் திருவடியில் உள்ளன. ஆகையால் நீயே பெருஞ் செல்வன் (பரமேஸ்வரன்). எனினும் உனக்கு எளிதில் கிடையாத பொருள் ஒன்று உளது. அதைப் பெற்றுக்கொண்டு அதற்குரிய விலையையும் நீயே பார்த்துக் கொடு என்கின்றார்.

*பொற்சிலைகைச் சிலை, யருகே தனபதி, நின்*
*திருவாயிற் பொருந்தும் தேவ*
*நற்றருக்கள், சுரபி சிந்தாமணி, முடிமேல்*
*தளிர் மதியம், நன்மைக் கெல்லாம்*
*இற்பொலியும் திருவடிகள், எனில், கயிலை*
*மலைக்கிறைவ ஏழை நாயேன்*
*நீற்களிப்ப தெவன்? இந்த நெஞ்சமே*
*உனக்களிப்ப நேர்ந்த தாமே (சிவானந்தலஹரி 27)*

அருகில் தம் வசத்திலிருக்கும் ஓரே பூவை, இதய தாமரைப் பூவை அவனுக்குத் தந்தால் அளவில்லாத நன்மையைப் பெறலாமே; இந்த வாணிப தந்திரம் அறியாமல் மடுவும் மலையும் வனமும் தேடிச் செல்கிறார்களே என இரங்குகின்றார் அப்பெரியார்,

*"அந்தோ! ஈதென்! சிலர் நின் திருவடிக்கோர்*
*இதய மலர் அர்ப்பித் திங்கே*
*சந்தோச முறவறியார்; உமைகேள்வ,*
*மிகுமாழத் தடத்தும், மாந்தர்*
*வந்தேதான் அறியாத கடுங்கானும்*
*நெடுமலையும் மலரைத் தேடித்*
*தந்தேகம் மிக வருந்த நுழைந்தலைகின்*
*றனர், அவமே! தவமற்றோரே" (சிவானந்த லஹரி 9)*

---

கனக மியற்றித் திரிந்து தவஞு மெனைச் சற் றறிந்து
கவலை யொழித் தற் கிரங்கி யருள்வரயே.

அந்த வியாபாரியால் தாம் செய்து கொண்ட பண்டமாற்றைப்பற்றி ஒருவர் சொல்லுகிறார். நாமும் அங்ஙனம் செய்யலாமே!

"சிந்தனை உனக்குத் தந்தேன் திருவருள் எனக்குத் தந்தாய்
பைந்துணர் உனக்குத் தந்தேன் பரகதி எனக்குத்தந்தாய்
வந்தனை உனக்குத் தந்தேன் மலரடி எனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்தநாதா கருவையில் வாழுந்தேவே"

சிந்தனைக்குக் கிடைக்கும் பொருள் திருவருளாம். பூவுக்குப் பயன் மேலான கதியாம். இந்த வியாபாரத்தைக் கண்டு போலும், ஒருவள்ளலார் தம் பொருள் அனைத்தையும்

வள்ளிசாகக் கொடுத்து விட்டு அவன் பொருள் அனைத்தையும்
அகப்படுத்திக் கொள்ள வியாபாரம் பேசுகின்றார்.

"என் உடலுயிராதிய வெல்லாம் நீயெடுத்துக் கொண்டுன்
உடலுயிராதிய வெல்லாம் உகந்தெனக்கே யளிப்ப
(இராமலிங்க சுவாமிகள்)

"கரவாகிய கல்வியுளார் கடை சென்று," இரவாமல், அருணையில் முழுதுணர் புலவனான முருகவேள் கடையிலே நின்று, அந்தச் செட்டியையே குரவனாப் பெற்றுத், தம்மையே அவனுக்குத் தந்து மெய்ப்பொருள் பெற்றவராகிய அருணகிரிநாதர், நம்மையும் அவன் கடையிலே வியாபாரம் செய்யத் தூண்டுகிறா. அன்பர்களே, நாம் கற்ற கல்வியறிவையும் இயல்பாக அமைந்த நுண்ணறிவையும் வேறு கடைப்பட்ட (கடையிலே யுள்ள, தாழ்ந்த) பொருள்களுக்கு விற்கவேண்டாம். வேலன் செட்டிக்கே அவற்றைத் தந்திராயின், மயக்கமாகிய வறுமை நீங்குவீர்.

---

வெஞ்சூர் உடர் பிளந்த அயிலுடைக் கதிர்வேலா [வாய்.
கமுலொலி தண்டையங் காலு மொக்க வந்து வரமெனக் கருள் கூர்

மெய்ப் பொருளாகிய செல்வம் சேரப் பெறுவீர்;" என்று அறிவுறுத்துகின்றார்.

"யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும்
தாமே பெற வேலவர் தந்து, அதனால்
பூமேல் மயல் போயற, மெய்ப்புணவீர்;
நாம் ஏன்? நடவீர் நடவீர் இனியே," (கந்தரநுபூதி.

(கல்வியையும் அறிவையும் வேலவர் தாமே பெறத் தந்து: என்பது பொருள்கோள் (Prose order). 'தாமே' என்பதில் ஏகாரம் பிரிநிலை மயல்போயற-மயக்கம் நீங்கி மீண்டும் நம்மால் வராது அழிந்தே போக. மெய்-காதி மோதி வாதாடும் உலகியற் கல்வியல்லாத அபரஞானமும், சிவானுபவமாகிய மெய்ஞ்ஞானமும். (அநுபூதி ஞானமும்)

நாம்-அச்சம். நடவீர் நடவீர் என்ற அடுக்கு விரைவுப் பொருட்டு. இனியே-எத்தனையோ காலம் பாழுக்கிறைத்தது போதும்; இனியாகிலும், அல்லது தவணை வைக்காமல் இப்பொழுதே )

நம பாரத நாட்டிலே இத்தகைய பண்டமாற்றிலே ஊதியம் பெற்றோர் பல்லாயிரவர். அவர்கள் கூறிய வியாபார நுணுக்கங்களை எல்லாம் எடுத்துச் சொல்ல யாரால் இயலும். கூறியது கொண்டு நாமும் நம் சரக்கை முருகன் செட்டி கையிலே கொடுத்து, அவன் கொடுக்கும் விலையை வாங்கி வறுமை நீங்கி வாழ்வோமாக.

"ஆழ்க தீய தெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே"

---

அடியேனை விடுதவி யாளவெற்றி வேல்கரம தேயெடுத்து
விறமயில் மீதினூற்ற வருவாயே,

# ஒரு கவிப் புலவன்

**(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B.A.B T.)**

தமிழகத்தில் வாழ்ந்த தண்டமிழ்ப் புலவர்கள் மிகப் பலர். அவர்கள் ஆக்கிய கவிகளும் அளப்பில. அவர்களில் ஒருவரை 'ஒரு கவிப் புலவன்' என்று அழைக்கிறார் நம் அருணகிரியாரான புலவர் பெருமான். அவரே நக்கீர நாயனுர். அவர் ஒரு கவிப் புலவராதல் எவ்வாறு என்று ஆராய்வாம்.

நக்கீரர் சிறப்பையறியாதவர் நந்தமிழ் நாட்டில் ஒருவருமிரார். இவரது இயற்பெயர் கீரன் என்பது. இது பிள்ளைத் திருநாமமான 'பாலப்பன்' என்ற பொருளுக்கேற்ப (கிர்—பால்) அழைக்கப்பட்டதென்றும், 'வாக்மி' எனப் பொருள்தரும் வட சொற் சிதைவென்றும் கூறுவாருளர். இதன் பொருள் யாதாயினுமாகுக. கீரந்தை, கீரங்கண்ணன், கீரங்கீரன் என்ற சொற்கள் தமிழிலுண்டாகலின், தக்க ஆதாரமின்றியே வட சொல்லெனல் பொருந்தாது. நக்கீரனுர் என்பதில் இவரது சிறப்பை விளக்கவே 'ந'கர இடைச் சொல்லும் 'ஆர்' விகுதியும் தரப்பட்டன என்ப. 'ந-சிறப்புப் பொருளுணர்த்துவதோரிடைச்சொல்; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற்போல' என எச்சகமும் புகழ் நச்சினர்க்கினியர் சிந்தாமணியுரையில் கூறியது கருதத் தக்கது.

இவர் பொய்யில் கேள்விப் புலமை வாய்ந்தவர். அளவிலை யார்க்கும் அறிவரியான் தந்த களவியற்கு மெய்ப்பொருள் கண்டார். சாவவும் வாழவும் பாடும் நிறைமொழி

---

பலபல வாம்யோக சாதக வுடல்கோடு மர்யாத போதக
பத்யழி யாவிடு போயினி யடைவேனே.

மாந்தர் வரிசையில் வைத்து நினைக்கத் தக்கவர். இவர் பாடிய வெண்பாக்களைத் தொல்காப்பிய செய்யுளியல் சூத்திரவுரையில் அங்கதச் செய்யுளுக்கு உதாரணமாகப் பேராசிரியரும நச்சினார்க்கினியரும் எடுத்துக் காட்டினர்.

" இனைவறுகுறுமுனி இலக்கணம்பெறப்
புனைதரும் இலக்கியப் புலவர் சிங்கம்"—துறைமங்கலத்தார்

" பொய்யற்றகீரன் " —கச்சியப்பசிவாசாரியர்

என்று கூறுவதால் இவரது கல்வித் திறன் நன்கு புலப்படும்.

இவர் மேற்கூறிய எடுத்துக்காட்டுக்களால் திருந்திய புலமைசால் அருந் தமிழ்வாணர் என்பது அறியப்படும்.

இனி இவர் செய்த நூல்கள் வருமாறு:

1. திருமுருகாற்றுப்படை 2. நெடுநல்வாடை 3. நக்கீரர் நாலடி நாற்பது 4. பதினோராந்திருமுறையில் கைலைபாதி காளத்திபாதி அந்தாதி முதலிய வேறு ஒன்பது நூல்கள். இவையன்றி, நற்றிணையில் ஏழும், குறுந்தொகையில் எட்டும், அகநானூற்றில் பதினேழும், புறநானூற்றில் மூன்று பாடல்களும் பாடியுள்ளார். இவ்வளவு கவிகளியற்றினும் அருணகிரியார்க்கு முருகபிரானை முன்னுற நிறுத்திக் காட்டும் முருகாற்றுப்படை ஒன்றே தன்னிகர் புலவரான நக்கீரரது ஒருகவியாய்ப், பெருங் கவியாய்க் காட்சி அளிக்கிறது.

காரணம் என்னை ?

---

அறிவரிய வொருபொருளை போதத் தேற்றிய அறிவோனே
அடிமைதனையுனது பார்வைக் காத்திட நினையாதோ.

1. அவர் பாடிய பாடல்களிலெல்லாம் பெரிதான 317 அடிகளைக் கொண்டது. (நெடுநல்வாடை 180 அடிகளே உடையது.)

2. பத்துப் பாட்டில் முதற்பாட்டாக இடம் பெறுவது.

3. பதினோராந்திருமுறையில் நக்கீரர் இயற்றிய தெனக் கருதப்படும் ஏனைய நூல்களை முருகாற்றுப் படையின் நடையை நோக்கி ஐயுறுவாருமுளர். ஆனால் அத்தகைய ஐயமின்றிக்கே நக்கீரர் திருவாக்கே என்று யாவரும் ஒப்ப நிற்கும் சிறப்புடையது.

4. சிற்றறிவுஞ் சின்னாள் வாழ்வும் பல்பிணியுமுடைய மக்கள்தலைவரிடம் ஆற்றுப்படுத்தாமல் அரும் பெறல் மரபில் பெரும் பெயர் முருகனிடம் ஆற்றுப்படுத்துவது.

5. சிறையுளழுந்திய கீரர் முதலிய ஆயிரவரையும் காத்து வரையிடித்தும், சிறை செய்த கற்கிமுனி என்னும் பூதத்தை அழித்தும், வழிகாட்டிய சிறப்புடையது.

6. "பொன்னவிர் சுணங்குபூத்த புணர்முலைக் கருங்கண் வள்ளி, கன்னலும் அமுதுந்தேனும் கைக்கும் இன்றீஞ் சொல்மாற்றி அறுமுகம்படைத்த அண்ணல் தன் செவிதாழ்த்துக் கேட்கச் செய்தது.

7. தெய்வயானை அம்மை கலவியின்பத்திலும் சிறந்து தித்தித்து இன்பூட்டும் இயல்புடையது.

8. முருகபிரானே இலக்கண இயல்போதி 'உலகா முவப்ப' என்று அடியெடுத்துதவிய சிறப்பினது.

"வளவாய்மைச் சொற்பிரபந்த முளகீரனுக்குகந்து
மலர் வாயிலக்கணங்க—ளியல்போதி

---

பழைய வேத வித்தர் தந்த கிறியோரனே
முநிவர் சுரர் தொழுது உருகு பாத பத்ம மென்று மறவேனே

அடிமோகே சொற்கிணங்க உலகா முவப்ப என்று
அருளாலளித்துகந்த—பெரியோனே

—திருப்புகழ்

9. ஆறுபடை வீட்டினருமை கூறி ஆறுதாரங்களை யும் குறிப்பாற் குறிப்பது.

10. கீத இசை கூட்டி வேத மொழி சூட்டப்பட்டது.

" அருமறைகள்கூட்டி உரைசெய் தமிழ்ப்பாட்டை
அடைவடைவு கேட்ட முருகோனே —திருப்புகழ்

இத்தகு சிறப்புவாய்ந்து சிறந்த பாராயண தெய்வத் திருமறையாக விளங்குதலின் 'ஒரு கவி' எனப்பட்டது. இது மரணகாலத்தில் சிலேத்துமமான சளி கட்டாதபடி அறுக்கவல்ல 'தேன்' மருந்தாகும். மும்மை மலத்தையும் அறுப்பது. "மும்மை மலமகல நக்கீர முனி சொன்ன திருமுருகாறெனுந் தேறல்" (தேறல்-தேன். இது கபத்தை அறுக்கும் என்ப மருத்துவ நூலறிஞர்.) மேலும் இதனைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் அரசர் வாழ்வும், மக்கட்பேறு முதலியனவும் பெற்றுப், பிணி, பிடி, பகை, துன்பம், பேய், தீக்கனு, கள்வர், விஷம் முதலிய அல்லல்களினின்று நீங்குவர்.

" மணிமுடி அரசர் வாழ்வு மக்கட்பேறுநிகல்கி
பிணிபிடி பகை இடுக்கண் பேய் இ(ன்)னுக்கனவு கள்வர்
பணிவிடம் ஒழிக்கும் ஆற்றுப்படை "

ஆகலின் அருணகிரியார் நக்கீரர் கவிகளில் முருகாற்றுப் படையே ஒருகவி எனவும், அதனை ஆக்கிய நக்கீரரே 'ஒரு கவிப் புலவன், எனவும் போற்றுவாராயினர்.

" பழுத்தமுது தமிழ்ப்பலகை
இருக்கும் ஒரு கவிப் புலவன்" —வேல்வகுப்பு

---

# ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

16-ஆம் பை

V. S. வேங்கடராமன்

## "கன்றுங்குறுந்தடியாம்"

கோபாலர் அனைவரும் பிருந்தாவனஞ் சென்றபின், தம் வண்டிகளைப் பிறைமதிபோல் நிறுத்திக் கூடாரங்களை அடித்துக்கொண்டு தங்கள் காலிகளைக் காப்பாற்றி வந்தார்கள். ஒரு பக்கம் கோவர்த்தன மலை, ஒரு பக்கம் யமுனையாற்று மணற்றிட்டுகள், இவை புடைசூழப் பிருந்தாவனமிருந்தமை கண்டு ஸ்ரீ பலராம கிருஷ்ணர்கள் மிக்க மகிழ்ந்தார்கள். செல்வமாய் வளர்ந்தவருமாகிக் கன்றுகளைத் தங்கள் தோழரோடு விளையாட்டுப் பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு இடைச்சேரிக்குச் சமீபத்தில் மேய்க்கவுந் தொடங்கினார்கள். சில நேரம் குழலூதுவர். பின் கவண்கல்லெறிந்து விக்கிப் பழத்தை வீழ்த்துவர். சலங்கைக் கால்களால் மரங்களையுதைப்பார். பொய்ப் பசுப் போலவும், பொய்க் காளை போலவும் கதறி ஏமாற்றுவர். வேஷம் போடுவர். ஒருவருக்கொருவர் குஸ்தி பழகுவர். அன்னம் போலக் கத்துவர். மயில் போல் அகவுவர். இப்படி விளையாடிக்கொண்டிருந்த பலராமகிருஷ்ணர்களைக் கொல்ல ஓர் அசுரன் கன்றினது வடிவமெடுத்துக்கொண்டு மற்றைக் கன்றுகளோடு சேர்ந்து கொண்டான். இதனை அறிந்த கண்ணன், அந்த மாயக் கன்றைப் பலராமனுக்குக் காட்டிவிட்டு ஒன்றும் தெரிந்து கொள்ளாதவர்போல அம் மாயக் கன்றினிடம் வந்தார்.

---

அடியேன்முன் கருணை பொழிந்து முகமு மலர்ந்து
கடுகி நடங்கோ டருள்வாயே.

அத் திருட்டுக் கன்று, வாலையாட்டுவதையும், கொஞ்சம் கழுத்தைத் திருப்பிக்கொண்டு போவதையும், ஏமாந்த வேளையை எதிர்நோக்கியதையும் முதலில் பார்த்தறிந்து அதன் பின்னங் கால்களை வாலோடு சேர்த்துப் "பூமராங்" போலச் சுழற்றி அக் கன்றுக்குறுந்தடியை விளாமரத்தின் உச்சிக் கிளை நுனியில் வீசி எறிந்தார். முதலிலேயே குற்றுயிர் கொண்டவன் மரக்கிளையில் மோதவே முழு உயிரும் நீங்கி விழுந்தான். அவ் வசுரன் தரையில் விழுந்தபோது கூடவே அவ்வசுரன்மீது பல ஆயிரம் விளாம் பழங்களும் பொத்துப் பொத்தென விழுந்தன. மாயக் கன்றினுடம்பு மறைந்து மனித பூத உடம்பு கண்ட குழந்தைகள் 'கண்ணு! நல்லது நீ செய்தாய். பலே பலே, என்று கிருஷ்ணனைப் புகழ்ந்தனர். கோபிமாரும் வத்ஸாசுரன் கதை கேட்டு மகிழ்ந்தார்கள். தேவர்கள் கற்பக மலர்மாரியைக் கண்ணன் மீது பெய்தனர். பொய்யும் படுகொலையும் அவ்வசுரரிடம் நிகழாதவாறு அருள் சுரந்து கண்ணன் செய்த திருவிளையாடலைப் போற்றாமல் யாரே இருப்பார்.

## ஸ்ரீ முருகன் பரிவார வணக்கம்

### மயில்

(N. S. ராமச்சந்திர ஐயர் ஆனமலை ரோடு,)

"சித்திரக்க லாபமயில் செவ்வேட் கிசைந்தமயில்
சத்துருக்க ளைச்சிறித் தாக்குமயில் — மித்ரமயில்
வாகைமயில் வேகமயில் வர்ணமயில் சொர்ணமயில்
தோகைமயி லுண்டே துணை.',

2 "அஞ்சிறைத் தோகைவிரித் தாடுமயி லன்பர் குழாம்
நெஞ்சி னினைக்கு முன்னேர் நிற்குமயில்—வெஞ்சூர்க்

---

பரம குருவாய் அணுவில் அசைவாய் பழைய வடிவாகியவேலா
ஒருவன் அடியேன் அலற மொழிதா னொருவர் பரிவாய் மொழிவாரோ.

குலங் கலங்கச் சிறுமயில் குன்றெறிந்தோ னூர்ந்து
துலங்குமயி லுண்டே துணை ''

வேல்

3 "வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரிற்
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்த வேல் உண்டே துணை.''

சேவல்

4 "வேலன் துவசமதில் வீற்றிருக்கும் ஆண்டலையே
காலன் வருமுன்னே காத்தருள் — ஞாலமதில்
இட்டார்த்தம் யாவும் இனிது நான் பெற்றிடவே
சட்டாங்க தண்டனிட்டேன் சார்ந்து."

5 குமரவேள் கேதனத்தில் குலவிடும் சேவலே நீ
அமரரின் இடரை நீக்க ஆணவ முற்ற சூரை
சமர்தனில் செகுத்த பால சண்முகன் அடிக ளேத்தத்
தமருடன் வருவீ ரென்றே சத்தமாய்க் கூவு வாயே.

தம் தம் இஷ்ட தெய்வத்தை அன்புடன் வழிபட்டு வரும் அடியார்கள் அனைவரும் அத் தெய்வத்தின் திவ்யாயுதங்களையும், வாஹனங்களையும், பரிவாரங்களையும் தோத்திரம் செய்தல் நம் நாட்டின்கண் தொன்று தொட்டுள்ள மரபாகும். இவ்வழக்கத்தை வேதோக்தமான ஸ்ரீ ருத்திரம் முதலியவற்றிலும் காணலாம். முற்கால பக்த சிரோமணிகளும் இதனைக் கையாண்டுள்ளனர், இக்காலத்திய சிறந்த அன்பர்களும் இதனை விடாமல் பின்பற்றி வருகின்றனர்.

இதற்குக் காரணம், எல்லா ஆற்றல்கட்கும் உறைவிடமாகிய ஆண்டவன் தன்பாலுள்ள பரிவாரங்களுக்கும் ஆயுதங்களுக்கும் ஸர்வ வல்லமையும் வழங்கியிருக்கின்றனர்

---

**பரகருணைப் பெருவாழ்வே, பரசிவதத் துவஞானந்**
**திரமதனைத் தெளிவாகத் திருவடியைத் தருவாயே.**

என்று நம் நூல்கள் கூறுகின்றன. ஆதலால் ஆயுதம், பரி வாரம் முதலியவற்றை வணங்கித் துதித்தல் இஷ்ட தெய் வத்தின் திருவருளை எளிதிலடைவிக்கும் ஒரு சிறந்த மார்க்கமென அவர்கள் திடமாய்க் கருதுகின்றனர். அநு பவத்தால் உணர்ந்தும் இருக்கின்றனர்.

முருகனைத் தவிர வேறொரு தெய்வத்தையும் பாடாத ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் தமது கந்தரநுபூதியில் முதற் பாட்டிலேயே இவ் வழக்கத்தைக் காட்டுகின்றார்.

"ஆடும் பரிவேல் அணி சேவலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே"

என்று பாடியுள்ளதை ஆழ்ந்து கவனிக்கின் இவ் விஷயம் தெள்ளிதிற் புலனாகும். அவ்வடிகள் இன்னும் மயில் விருத்தம், வேல் விருத்தம் முதலிய அரிய துதிகளை யும் ஆக்கியுள்ளார்.

இன்னும் ஸ்ரீமத் ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகளும் தமது ஸுப்ரம்மண்ய புஜங்கத்தில் வாழ்த்துக் கூறுவதற்கு முன் வேதஸ்வரூபமாயும் திவ்ய வாஹனமாயும் விளங்கும் மயிலையும், ஆன்மவித்யா வடிவாகிய சக்தி யெனும் ஆயு தத்தையும், மாயாதத்வரூபமானதும் முன்னொருக்கால் வாஹனமாயும் உள்ள ஆட்டினையும், கொடியாகவும், அஹங்காரதத்வ ஸ்வரூபமாகவும் விளங்கும் குக்குடத்தை யும், முருகன் முன்னிலையில் ஆனந்த ரூபமாகத் தோன் றும சமுத்திரத்தையும், முக்தி ப்ரதேசமாய் விளங்கும்

---

அருணை யிறையவர் பெரிய கோபுரத்தில் வடபாலமர்ந்த ஆறுமுகப் பெரு மனமு முநிகியே யாதரிக்க உயிர் போறுகந்து அடுட்புகிவாயே [மானே.

சிந்து தேசத்தினையும் பன்முறை நமஸ்கரித்துத் தோத்தரிக்கின்றார்.

> "நம: கேகினே சக்தயே சாபி துப்$_3$யம்
> நம: ச்சாக$_3$ துப்$_4$யம் நம: குக்குடாய
> நமஸ்ஸிந்த$_4$வே ஸிந்து$_4$ தே$_3$சாய துப்$_4$யம்
> நமஸ்கந்த$_3$ மூர்த்தே நமஸ்தே நமோஸ் து"

என அழகுபடக் கூறியுள்ளார்.

பக்தி மார்க்கத்தில் பெரியோர்கள் காட்டியுள்ள வழியைப் பின்பற்றுவதே சாலச் சிறந்த மார்க்கம். முருகப் பெருமானது திருவருளை எளிதில் அடைய விரும்பும் அன்பர்கள் அவரது பரிவாராத்யாயுதங்களையும் வணங்கித் துதித்தல் மிகவும் அவசியமாகும். இவ்வழியை நாம் அனைவரும் கடைப்பிடித்து அவன் அருளை எளிதில் பெறுவோமாக.

## ஸ்ரீ அருணகிரி அநுபூதி

(ஸ்ரீ வத்ஸன்)

"நெஞ்சக்கனகல்லு" என்பதாக நமது அருணகிரியார் நெஞ்சை ஓர் கல்லுக்கு உவமை கூறியதின் கருத்து யாது என்பதைப்பற்றி சென்ற சஞ்சிகையில் விவரிக்கப்பட்டது.

இனி திருநாவுக்கரசு சுவாமிகள் நெஞ்சை ஓர் நீர் தேக்கத்திற்கும், நெஞ்சின் கண்ணுள்ள வஞ்சத்தை, அந் நீர் தேக்கத்திலேற்படும் சுழலுக்கும் ஒப்பிட்டது யாது

---

பூவைகுறப் பாவை தனத் தேயுடுக்ச் சேருமணிக் கதிர்வேலா
உள்சேதி யொளிப் பாத மலித் தருள்வாயே

காரணம் பற்றி என்று அவரது பாட்டுக்களிலிருந்து அறிய முடியவில்லை. ஆனல் சித்தர்கள் இயற்றியுள்ள நூல்களி லிருந்து ஒருவாறு அறியலாம். அவையாவன:—

"மூலமாங் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே யெழுந்திருந்து நாலு கட்டறுப்பிரேல்
பாலனாகி வாழலாம், பரப்பிரம மாகலாம்
ஆலமுண்ட, கண்டர் பாதம் அம்மை பாத முண்மையே"
(சிவ வாக்கியர்)

காயாம்பட்டி குளத்துக்குள்ளே வெள்ளை
காசாம் வேறு முளைத்திருக்கும்
வாயாற்றின்னு நிமிர்ந்தாக்கால் உடல்
மாயாதல்லவோ ஞானப் பெண்ணே.
(கொங்கணர் ஞானக்கும்மி)

மற்றும், போகர், சட்டமுனி, திருவள்ளுவர் முதலிய சித்தர்களும் மேற் கண்டவாறு குளத்திலுள்ள பாசியைப் போல் இச் சரீரத்திலும் குளம் போன்ற நீர் ஊற்றுக்க ளிடை. பாசியை யொத்த விழ நீர்கள் உண்டு அவற்றை முறைப்படி நீக்குபவர்கள் சிரஞ்சீவியாக அழியாத தேகத் துடன் வாழ முடியும் என்று திண்ணமாகக் கூறி யுள்ளார்கள் இத்தகைய குளமும் பாசியும் இச் சரீரத்தில் எங்கு உள்ளது. அதை எப்படிக் களைய முடியும் என்பதை யோக சாத்திரத்தில் அதிலும் வாசி யோகததில் பழக்க முள்ளவர்களிடமாக நேரில் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

நிற்க, புராண வாயிலாக நாம் அறிவது:— திருப்பாற் கடலை வாசுகி என்னும் பாம்பை நாணாக வைத்துக்

---

**சுருதி கோ கோவெனப் பொருதவே லாயுதப் பெருமாளே**
**பிறவி சுழியிலே போய் விழப் பெறுவதோ நான் இனி, புகல்வாயே.**

கடைந்தபோது, அப் பாம்பு கால கோடி விஷம் என்னும் மகா கொடிய விஷத்தைக் கக்கினதும் அதன் வாடை (காற்று) பட்ட மாத்திரத்தில் மாலின் உடல் விஷ வர்ணம் (நீலம்) அடைந்ததாம். அதைக் கண்ணுற்ற தேவர்கள், அவ்விடத்தை உட்கொண்டு அதன் வீரியத்தை அடக்கும்படி பரமசிவத்தை வேண்ட, அவரும் அவ்வாறு செய்யத் துவக்கினாராம். கேவலம் அவ்விடத்தின் காற்றுப்பட்ட மாத்திரத்திலேயே சரீரம் வர்ணம் மாறிய இலக்குமியின் கணவனைக் கண்ணுற்ற உமை, (பார்வதி) தமது பதிக்கும் அத்தகைய நிலைமை ஏற்பட்டு விடுமோ என பயந்து, விழுங்கிய அவ்விடம் கண்டத்தைவிட்டுக் கீழே இறங்காமலிருக்கும்படி பரம சிவத்தின் கண்டத்தைக் கெட்டியாய்ப் பிடிக்க, அவ்விடம் அங்கேயே தங்கி விட்டதாம். அன்று முதல் மாலின் வர்ணம் நீலமேக சியாமளமாகவும், பரம சிவத்தின் கண்டம நீல கண்டமாகவும் ஏற்பட்டதாம். அது பற்றியே அவருக்கு விஷ கண்டன், கால கண்டன் நீல கண்டன், எனக் காரணப் பெயர்கள் வரலாயிற்று—

கதையின் வரலாறு ஒரு புறமிருக்க, இதிலிருந்து ஒரு உண்மை மட்டில் புலனாகிறது அதாவது, கண்டத்தில் நஞ்சு (விஷம்) உண்டு. ஆனது பற்றியே அந் நஞ்சு உள்ள தலத்தை நெஞ்சம் எனக் கூறலாயினர். அருணகிரியாரும், மற்ற சமய குரவர்களைப் போன்று இவ் விஷக் கல்லாகிய நஞ்சை யொத்தது வஞ்சம் என்றும், அதற்கிருப்பிடம் நெஞ்சம் என்றும் கூறி, அப் பாஷாணம் (விடம்) உருகிக் கரைந்தாலன்றி, அந் நெஞ்சம் சுத்தப்படாது என்

---

**ஒடுமால் வரையைச் சிறுதுள் படவிட்டுரமோ டெறிபோற் கதிர்வேலா**
**எவாய் நரகிற் புகுதா தபடிக்கு இடுபர்தமெனக் கடுள்வாயே.**

னும் ஓர் ஒப்பற்ற உண்மையை இச் செய்யுளில் நெஞ்சம்'' என்ற சொல்லால் விளக்கியுள்ளார்—

சுவபாவத்தில், விக்ஞான ரீதியாக இவ்வுடலில் இத் தகைய நஞ்சினைக் களைந்து தூய நிலையை அடைவது எப் படி என்பதைப்பற்றி சித்தர்கள் கற்பசாதன மார்க்கத்தில் கூறிவிட்டதை மேலே குறிப்பிட்டோம். இனி அருணகிரி யார் கூறியுள்ள பக்தி மார்க்க வழி யாது என்பதைக் கவனிப்போம்.

**செஞ் சொல்** : தீஞ்சொல் அல்ல. சொற்களில் ஆகும் சொற்கள் ஆவன: ஏகாட்சரம், பஞ்சாக்கரம், சடாக்கரம், அட்டாக்கரம் முதலிய நற்பலனை அளிக்க வல்ல சொற்கள். தீஞ்சொற்கள் ஆவன:— வசியம், மோகனம், தம்பனம், பேதனை, மாரணம் முதலிய தீயபலனை அளிக்கவல்ல சொற்கள்

நிற்க, சொல் என்றால் பொருள் உண்டு. உடனே பலனும் ஏற்படும். உதாரணமாக ஒரு பாலன் ஒரு பெரியவரைக் கண்டதும் 'வணக்கம்' என்றதும், பெரியவர் தம்மிடம் அப்பாலன் மரியாதைசெலுத்துவதை உணர்ந்து, அதற்குப் பலனாக உடனே அவர் அப்பாலனை நீ வெகு காலம் வாழ்க'' என்று ஆசி கூறுகிறார். இங்கு வணக்கம் என்றது ஓர் நல்ல சொல். அதே போல் தீஞ் சொல்லாகிய "உதை'' என்றதை ஒருவர் மற்றொருவரை நோக்கிக் கூறி னால் அதன் விளைவு யாதாயிருக்கும் என்று கூற வேண்டிய தில்லை. ஆகவே மனிதர்களே ஒருவர்க்கொருவர் கடுஞ் சொல் அல்லது தீய சொல்லை ஏற்க முடியாதபோது,

---

ஒடுக்கால் நினைத்திட் டிருக்கால் மிகுத்திட் டுரைப்பார்கள் சித்தத் துறைவோனே
கருத்தாலெனக்குத்திருத்தாளளித்துக் கலைப்போதகத்தைப்புகல்வாயே.

தமது முருகக் கடவுள்பால் தீய சொற்கள் வேண்டா, செஞ்சொற்களாலேயே துதியுங்கள், வழிபடுங்கள் என்று அறிவுறுத்துகிறார் நமது அருணகிரியார்.

**புனை மாலை:** மனிதர்கள் ஒருவர்க்கொருவர் ஏதாமொரு நன்மைபடைய வேண்டினால், பலமுறை வேண்டுதல் அவசியம் அப்படிப் பன்முறை வேண்டியுங்கூட பயன் பெறல் சிற்சில சந்தர்ப்பங்களில் முடியாததாகி விடுகிறது. அப்படியிருக்க, முருக பிரானிடம் ஓர் ஒப்பற்ற அறிவை வேண்டுபவர்கள் ஒரு முறை அல்லது இருமுறை "முருகா—முருகா" என்று வணங்கினால் போதாதோ எனில், நமது அருணகிரியார் போதாது என்றே கருதுகிறார். பின், ஓர் மாலையில் புட்பங்களைத் தொடுப்பது போன்று பலமுறை என்கிறார். அதிலும், ஓர் முகூர்த்தத்திற் கொருமுறை, அல்லது ஒரு யாமத்திற்கு ஒரு முறை முருகா" என்றால் போதுமோ எனில், போதாது, மாலையில் பூக்களைப் புனைவது போன்று, அடுத்தடுத்து, தொடர்ந்தாற் போல் "முருகா, முருகா......." என்று ஒரு தடவை முருகா என்றதும், வேறு எண்ணம் மனத்திலுதிக்குமுன், உடனுக்குடன் அம் முருக நாமத்தை உச்சரித்தாலன்றி அம்முருகனிடம் திட சித்தம் ஏற்பட ஏதுவில்லை என்று கருதி "புனை மாலை" என்ற சொற்களை வெகு அழகாக உபயோகப் படுத்தியுள்ளார் நமது அருணகிரிப் பெருந்தகையார்.

தவிர மந்திர சாத்திரப்படி மந்திரம் பலிக்க வேண்டுமானாலும், அதை லட்சம் உரு போடவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. முருகனருள் வேண்டினால் இலட்ச

---

**திசைமுக வனை நீள் சிறையுற விடுவாய் திடுநெடு கடுமால் மருகோனே சததள மலர்வார் புனை நின கழலார் தருநிழல் புகவே தருவாயே.**

மல்ல, இலட்சக்கணக்கில் என்பதைக் குறிக்கவேண்டியே இங்கு புணைமாலையின் அளவைக் குறியாது விடுத்தார் நமது நூலாசிரியர்.

அருணகிரியார் "புணைமாலை" என்ற சொல்லை உபயோகப்படுத்தினர் இங்கு. சமய குரவர்கள் இன்னும் கொஞ்சம் துல்லியமாக "நாத்தழும்பேர" முறையிட்டாலன்றி அருள் கிட்டாது என்று கூறியிருக்கிறார்கள்.

"இருந்து நன்மலர் புனையேன்"
எந்தனுத்தழும்பேர......"மாணிக்கவாசக சுவாமிகள்.

ஒரு நல்ல காயம் அல்லது புண் ஏற்பட்டு, பிறகு அது குணமடைந்த பின் காணப்படும குறியே "வடு" அல்லது "தழும்பு" எனப்படும். உயிருள்ள வரையில் சரீரத்திலேற்பட்ட அத்தழும்பு மாறாது. அஃதே போல் மாறாத தழும்பு நாவில் ஏற்பட வேண்டும என்கிறார். அதுவும்

நான் மறக்கினும் என் நாவு வழுத்துவது
நாதர் நாமம் நமச்சிவாயமே" (அப்பர்

நமச்சிவாய நாமத்தை ஆணவ மேலீட்டால் நான் மறந்தாலும், என் நாவை நீட்டினால் அதில் காணப்படும் வடுவே நமச்சிவாயநாமம் என்று திருநாவுக்கரசு சுவாமிகளும் கூறியதை அடுத்து, நமது அருணகிரியாரும் "புணைமாலை" என்றார்

சரி, செஞ்சொற்களை அடுக்கடுக்காக, விடாமல் உருப்போட்டு வந்தால் போதுமா, முருகன் அருள் கிடைத்துவிடுமா எனில், நமது அருணகிரியார், முருகன் கருணையை அறிந்தவராதலால், போதாது என்கிறார். பின் அவன் அருளைப் பெற வழியுண்டோ எனில், உண்டு என்னும் நமது அருணகிரியாரின் போதனையை அடுத்த சஞ்சிகையில் விவரிப்போம்.

ஆயுர்வேதவித்வான் B.Y. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலே' நஞ்சன்கூடு

யாவருக்கும்
I.D.L.21 ஸ்வாஸ்கோ கிருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

மாதர்களுக்கு
I.D.L.71 ப்ரெமெலெக்ஸ் ரக்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெஹு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிரூல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

குழந்தைகளுக்கு
I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61 (மெடிகேட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீர்ண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

தபால் பில்லையும், தங்கள் விலாசமுள்ள கவருடன் வியாதி விபரம் எழுதி, எங்கள் வைத்தியசால் தபால்மூலம் சிகிச்சை பெறவும்

சோல ஏஜெண்டுகள்
யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு :: மதறாஸ்.1

"அருளில்லார்க்கு
அருளறிவு தங்குமோ
அருளறிவு தானல்லவோ
ஆனந்தம்"

(பட்டினத்தார்)

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பீடி
நெ. 1506

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்பு பெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி - மதுரை.

Tel:—"FAITH' Estd:—1924 Phone:—113

வியாபாரக்குறி

N. K. M.
தங்கநாடா

நம நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஐவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53, கிடங்குத் தெரு, மதராஸ் 1.


Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road Madras—18
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras